DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW7 | Caste | : | |
| Name | : | மூர்த்தி | Age | : | 63 |
| F/N | : | காயம்பு | Occupation | : | கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு |
| Village | : | வெளிப்பட்டிணம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 24-th day of November 2022.

**<u>24.11.2022.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஆர். எஸ். மங்களம் தாலுகாவில் இராதானூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று வெளிப்பட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. மேற்படி கையெழுத்தை எதிரி மனோகரன் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த போது நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். கடந்த 10.06.2013-ம் தேதி மாலை 06.15 மணிக்கு இராமநாதபுரம் மாவட்டம் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் வழக்கின் எதிரி மனோகரன் வீட்டின் முன்பாக அவரை எங்கள் முன்னிலையில் போலீசார் கைது செய்தும் அன்று மாலை 06.30 மணிக்கு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த போது நானும், கிராம உதவியாளர் ரமேஷ் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. கடந்த 10.06.2013 அன்று இராமநாதபுரத்தின் தாசில்தார் யார் என்றால் திரு. கதிரேசன் என்பவர் இருந்தார். அந்த தாசில்தார் கதிரேசன் இந்த வழக்கில் ஒரு சாட்சி என்றால் சரிதான். அவர் என்னுடைய மேல்அதிகாரி என்றால்

சரிதான். என்னுடைய அலுவலகம் காட்டுரணியில் இருந்து சுமார் 1 ½ கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காட்டுரணி அருகே பழங்குளம் கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். கேணிக்கரை காவல்நிலையம் எனது அதிகார வரம்பிற்கு உள்ளது என்றால் சரிதான். நான் கேணிக்கரை காவல்நிலையத்தில் பல வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக இருந்துள்ளேன் என்றாலும், நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான்.

2. எதிரி மனோகரன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னிடம் தொலைபேசி மூலமாக ஒருவரை கைது செய்து வைத்துள்ளோம் என்னை சாட்சியாக வரும்படி அழைத்தார் என்றால் சரிதான். ஆய்வாளர் 05.45 மணிக்கு எனக்கு போன் செய்தார் அந்த சமயத்தில் நான் என்னுடைய அலுவலகத்தில் இருந்தேன். அவர் என்னை காட்டுரணி கிராமத்திற்கு வர சொன்னார். நான் எந்த தெருவிற்கு சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை ஒரு கோவிலை ஒட்டி அந்த தெரு இருந்தது. அந்த தெருவில் 30, 40 வீடுகள் இருந்தது. நான் அந்த இடத்திற்கு போகும் போது ஆய்வாளர் மனோகரனை கைது செய்து வைத்திருந்தார் என்றால் சரிதான். நான் செல்லும் போது அந்த இடத்தில் 15 நபர்கள் இருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எழுதினார். அத்தாட்சி எதுவும் தயார் செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்ட பின் நான் என்னுடைய அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். ஆய்வாளர் அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு என்னை அழைத்தாரா என்றால் இல்லை.

3. நான் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் தான் போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் ரவிச்சந்திரனை அடையாளம் காட்டுகிறேன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ரவிச்சந்திரனை அடையாளம் பார்க்க ஆய்வாளர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ரவிச்சந்திரனை எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் மனோகரன் என்பவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், ரமேஷ் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் இருப்பு சாட்சி என்றாலும், அதனால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மனோகரனை கைது செய்யும் போது நான் உடன் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW8 | Caste | : | |
| Name | : | ரமேஷ் | Age | : | 53 |
| F/N | : | களஞ்சியம் | Occupation | : | கிராம நிர்வாக அலுவலர், எக்கக்குடி குரூப் |
| Village | : | வெளிப்பட்டிணம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 24-th day of November 2022.

**24.11.2022.**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் எக்கக்குடி குரூப் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.7 யை தெரியும். அ.சா.1 யை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கின் மற்றொரு எதிரி மனோகரன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கடந்த 10.06.2013–ம் தேதி பட்டிணங்காத்தான் குரூப் கிராம உதவியாளராக பணியில் இருந்த போது அ.சா.7 அழைத்ததின் பேரில் காட்டுரணி கிராமத்தில் உள்ள மனோகரன் என்பவரின் வீட்டிற்கு சென்றோம். போலீசார் அவரை கைது செய்த போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், அ.சா.7 ம் சாட்சியாக கையொப்பம் செய்தோம். (**அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.7 எதற்காக காட்டுரணிக்கு செல்லவேண்டும் என்று என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. தாசில்தார் கதிரேசன் மற்றும் அன்புநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன தேதி எனக்கு எப்படி ஞாபகம் உள்ளது என்றால் அழைப்பாணை சார்பு செய்ய வந்த போலீசாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். 2–வது எதிரியின் வீடு எந்த

தெருவில் உள்ளது என்றால் பிள்ளமார் தெருவில் உள்ளது. அந்த தெருவில் மனோகரன் வீடு 3 வது வீடாக இருந்தது. அந்த வீடு வடக்கு திசையை நோக்கி உள்ளது. அந்த தெரு தென் வட  தெரு என்றால் தவறு. கிழ மேற்கு தெரு ஆகும். மனோகரனின் வீடு தார்சு வீடு. நான் செல்லும் போது மனோகரன் வீட்டின் அருகே போலீசார் 4 நபர்கள் இருந்தார்கள். மற்ற யாரும் அங்கு இல்லை. அந்த இடத்தில் நாங்கள் 45 நிமிடம் இருந்தோம். ஒப்புதல் வாக்குமூலம் மனோகரன் வீட்டில் உள்ள திண்ணையில் வைத்து எழுதப்பட்டது. காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதினார்.

2. ஒப்புதல் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை ரவிச்சந்திரனை நான் அடையாளம் காட்டுகிறேன் என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. ஆய்வாளர் எங்களை ரவிச்சந்திரனை பார்க்க அழைத்து சென்றாரா என்றால் இல்லை. என் முன்னிலையில் மனோகரன் என்பவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், மூர்த்தி என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் இருப்பு சாட்சி என்றாலும், அதனால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மனோகரனை கைது செய்யும் போது நான் உடன் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இதே போல் நீதிமன்றத்தில் பல வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.என்னுடைய உயர் அதிகாரி கதிரேசன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 158/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW9 | Caste | : | |
| Name | : | அன்புநாதன் | Age | : | 62 |
| F/N | : | கதிரேசன் | Occupation | : | துணை ஆட்சியராக பணிபுரிந்து ஓய்வு |
| Village | : | எல்லீஸ் நகர் | | | |
| District | : | மதுரை | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 24-th day of November 2022.

**24.11.2022.**

**முதல் விசாரணை**

நான் துணை ஆட்சியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மதுரை மாவட்டம் எல்லீஸ் நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் எதிரியையும், மற்றொரு எதிரியையும் எனக்கு தெரியாது. கடந்த 2012 முதல் 2013 ம் வருடங்களில் நான் இராமநாதபுரம் வட்டத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்த போது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்திலிருந்து பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்வது தொடர்பான உத்தரவுகள் தாலுகா அலுவலகத்தில் பெறப்படும். அந்த உத்தரவின் பேரில் பிறப்பு, இறப்பினை பதிவு செய்வதற்கு பிறப்பு, இறப்பு பதிவாளர்களான எனக்கு கீழ் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலகளுக்கு மேல் உத்தரவு பிறப்பித்து அனுப்பி வைப்பேன். அவ்வாறு அனுப்பப்படும் நீதிமன்ற உத்தரவுகளை பரிசீலித்த போது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 நீதிபதி அவர்களின் கையொப்பம் ஒரு சில உத்தரவானைகளில் வேறுபாடாக இருந்தது. எனவே, நான் அவற்றை எடுத்துக்கொண்டு நேரடியாக அ.சா.1 அவர்களிடம் நேரடியாக சமர்ப்பித்து கையெழுத்து வேறுபாடாக உள்ளது என்று சுட்டிக்காட்டினேன். அந்த கையெழுத்தை சரியா என உறுதி செய்து தருமாறு கேட்டுக்கொண்டேன். பரிசீலிக்கப்பட்ட நான்கு நீதிமன்ற உத்தரவுகளில் மூன்று உத்தரவுகளில் அ.சா.1 ன் கையெழுத்து இல்லை என்றும் ஒரு உத்தரவில் மட்டும் அ.சா.1 ன் கையெழுத்து தான் என்றும் வாய்மொழியாக தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஒப்புகை சீட்டு பெற்றேன். பின்பு அ.சா.1 னிடம் அறிக்கை சமர்ப்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்2 நீதிபதி அவர்களின் மாதிரி கையொப்பம் எங்களின் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்ததா என்றால் இல்லை. எனக்கு வந்த உத்தரவுகளில் சுருக்கொப்பம் இருந்ததா இல்லை கையொப்பம் இருந்ததா என்றால் கையொப்பம் தான் இருந்தது. கையெழுத்து என்பது முழு பெயரை வைத்து போடுவார்கள் சுருக்கொப்பம் என்பது initial மட்டும் செய்வார்கள் என்றால் அது அந்தந்த அலுவலரின் விருப்பம். அ.சா.ஆ 2ல் நீதிபதியின் முழு பெயர் எழுதி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னால் வேறுறொரு நபரின் கையெழுத்தை பார்த்து அது சுருக்கொப்பமா, கையொப்பமா என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் நீதிபதியின் நான்கு கையெழுத்துக்கள் வித்தியாசமாக உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வித்தியாசத்தை கண்டுபிடிக்க நான் நீதிபதியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தை ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் அந்த நான்கு உத்தரவுகளிலும் கையெழுத்து வித்தியாசமாக இருந்தது.

2. நான் கையெழுத்து நிபுணர் இல்லை என்றால் சரிதான். நான் நான்கு உத்தரவுகளில் உள்ள கையெழுத்து வித்தியாசமாக உள்ளது என்று சொன்னேன் என்றாலும், அதில் ஒரு உத்தரவில் உள்ள கையெழுத்து நீதிபதியின் கையெழுத்து தான் என்று நீதிபதி சொன்னார் என்றாலும் சரிதான். அதனால் நான்கு உத்தரவுகளிலும் உள்ள கையெழுத்து தவறானது என்ற என்னுடைய முடிவு தவறானது என்றால் சரிதான். நான் நிர்வாக நடுவர், அ.சா.1 நீதித்துறை நடுவர் என்றால் சரிதான். என்னிடம் இருந்து செல்லும் எந்த ஒரு தகவலும் எழுத்து மூலமாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் நீதிபதியிடம் வாய்மொழியாக தெரிவித்த தகவல்களை குறித்து எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

3. நீதிபதி என்னிடம் வாய்மொழியாக தான் தகவல் சொன்னார் என்றால் சரிதான். எங்கு எப்பொழுது நீதிபதியிடம் வாய்மொழியாக கேட்டேன் என்றால் அவருடைய அலுவலகத்தில் வைத்து கேட்டேன். நான் கொடுத்த உத்தரவுகளில் அ.சா.1ன் கையெழுத்து இல்லை என்று அ.சா.1 உடனடியாக என்னிடமும் சொல்லவில்லை பரிசீலனை செய்த பிறகு சொல்கிறேன் என்று சொன்னார். நான்கு உத்தரவுகளையும் நான் நீதிபதியிடம் வாய்மொழியாக கேட்டபோதே ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த உத்தரவுகளை ஒப்படைத்தற்கு நான் தலைமை எழுத்தரிடம் ஒப்புகை சீட்டு பெற்றேன். அந்த ஒப்புகை சீட்டை நான் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஒப்புகை சீட்டை குறித்து நான் போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை.

இராமநாதபுரத்தில் உள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 மற்றும் எண்.2 நீதிமன்றங்களிலிருந்து பிறப்பு, இறப்பு சம்மந்தமாக உத்தரவுகள் வரும் என்றால் சரிதான்.

4. குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இருந்து வந்த உத்தரவுகளில் பிரச்சனை எதுவும் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் எதிரியான மனோகரன் மாவட்ட ஆட்சியரிடம் தாசில்தார் அலுவலகத்தில் நடக்கும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் சம்மந்தமான முறைகேடுகள் குறித்து புகார் அளித்து அதன்பேரில் எனக்கு ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்ததா என்றால் இல்லை. அவ்வாறு மனோகரன் என்பவர் புகார் கொடுத்ததால் காழ்புணர்ச்சியின் பேரில் கையெழுத்து வித்தியாசமாக இருந்தது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நீதிபதியிடம் நான் வாய்மொழியாக எந்த தேதியில் விபரம் கேட்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.1 ஒரு நகல் ஆவணம் என்றாலும், அதில் உண்மை நகல் என்று ஒரு கையெழுத்து உள்ளது என்றாலும் சரிதான். அ.சா.ஆ.1ல் அனுப்புநர் என்பதற்கு கீழ் அன்பழகன் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்பழகன் என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது பின்பு அடித்து மாற்றப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 தாசில்தார் அலுவலகத்தில் இருந்து உண்மை நகல் என்று குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த ஆவணத்தில் இருந்து தான் அ.சா.ஆ.1 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணம் உண்மை ஆவணம் கிடையாது என்றால் சரிதான். ஒரு உண்மை ஆவணத்தில் இருந்து தான் இரண்டாவது ஆவணம் தயாரிக்க முடியும் என்றால் சரிதான். நான் நீதிபதியிடம் வாய்மொழியாக முறையீடுவதற்கு முன்பு சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**